بسم الله الرحمن الرحيم



**FRIDAY SERMON**

08 MARCH 2019

(30 JAMADI'UL AAKHIR 1440 AH)

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH
MUNIR AHMAD AZIM**

# "JIHAD : NEVER THROUGH COMPULSION"!

## "ஜிஹாத் : ஒருபோதும் கட்டாயபடுத்துவதற்கு செய்ய கூடாது!"

**TAMIL VERSION /** தமிழ் பதிப்பு

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

அல்லாஹ் திருக் குர்-ஆனில் கூறுகின்றான்.

"மார்கத்தில் எவ்விதக்கட்டாயமுமில்லை" (2:254)

உண்மையில் இது மிகவும் பிரபலமான குர்- ஆனிய வசனங்களில் ஒன்றாகும். மேலும் இன்று நிலவும் நிலைமைகளைக் கருத்தில் கொண்டால் இக் குர்-ஆனிய வசனம் அதற்கு பொருந்தும் வகையில் அமைந்துள்ளது. திருக் குர்-ஆனின் போதனைகளைக் குறித்து எதுவும் அறியாதவர்கள் கூட இக்குர்-ஆனிய வசனத்தைப் பற்றி கேள்விப்பட்டிருப்பார்கள். இவ்வசனம் மதங்களுக்கு

இடையிலான உறவை எடுத்துக்காட்டுகிறது. இக்காரியத்தில் அதாவது நம்பிக்கையின் காரியத்தில் கட்டாயப்படுத்துவது மத நம்பிக்கைகளை பாதிக்கும் ஒன்றாகும்.

இந்த இறைவெளிப்பாடு வசனம் திருக்குர்-ஆனில் இருந்திருந்தும், பிற ஜமா அத்துகளில் பட்ட சில பண்டிதர்கள், மத காரியங்களில் கட்டாயப்படுத்துவது முற்றிலும் சட்டபூர்வமானது என்பதை நிருபிக்க முயற்சித்து வருகின்றனர். ஆனால் நாங்கள், அதாவது ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் அதற்கு எதிராகும். ஜமாஅத்துச்சஹீஹில் இஸ்லாம் இந்த இறைவசனத்தை முழுமையாக அங்கீரிக்கின்றது. இச் செய்தியனை பரிபூர்ணமாக நாங்கள் மதிக்கின்றோம். வைதீகமான மக்களின் நம்பிக்கையிலிருந்து முற்றிலும் மாறான ஒரு நிலைபாடு ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமிற்கு இக்காரியத்தில் உள்ளன.

ஆற்றலை பயன்படுத்துவது தடைசெய்யப்பட்ட காரியம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நம்பிக்கையின் காரியத்திலானாலும், வேறு எந்த காரியத்திலானாலும் சரி அத்தகைய வழிகளால் எதிர்பார்க்கப்படும் இலக்கை ஒருபோதும் அடைய இயலாது. பின்வரும் வசனம் இதைத்தான் நமக்கு கற்பிக்கின்றது.

## TWO FORMS OF COMPULSION

## கட்டாய படுத்தலின் இரண்டு வகைகள்.

1. ஒரு மதத்தை பரப்புவதற்கு சக்தியைப் பயன்படுத்துதல்.
2. ஒருவரை தனது மதத்திலிருந்து கட்டாயப்படுத்தி நீக்கி கொள்ளுதல்.

இவ்வாக்கியம் நம்மிடம் கூறுகின்றது, ஒரு புதிய நம்பிக்கையை ஏற்றுக்கொள்ள நமக்கு இன்னொருவர் மீது ஆற்றலை பயன்டுத்த முடியாது. அதுமட்டுமல்ல தனது மதத்திலிருந்து ஒருவரை கட்டாயப்படுத்தி நீக்கி கொள்ளவும் நமக்கு முடியாது. மிக நேர்மையான நம்பிக்கையாளர்களை இஸ்லாமிலிருந்து நீக்கி கொள்வதற்கு முடியும் ஆனால் அது ஒரு போதும்

வெற்றியடைவதில்லை. ஏனெனில் இவ்வசனம் நமக்கு இதனைக் கூட கற்பிக்கின்றது.

**“மார்கத்தில் எவ்விதக்கட்டாயமுமில்லை. நிச்சயமாக நேர்வழிக்கும் தவறான வழிக்கும் இடையிலுள்ள வேறுபாடு, மிகத் தெளிவாகி விட்டது. எனவே நன்மையைச் செய்யவிடாது தடுக்கக் கூடியவனை நிராகரித்து, அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறவர் அறுந்து விடாத மிகவும் உறுதியுள்ள நம்பத்தகுந்த ஒன்றை வலுவாகப் பற்றிக் கொண்டனர். அல்லாஹ், நன்கு செவியேற்பவனும் நன்கு அறிபவனுமாவான்”** (2:257)

இதுவே இவ்வசனத்தின் வெளிப்படையான அர்த்தம் என்று நமக்கு உணர்ந்து விடலாம். அதாவது ஒருவரை கட்டாயப்படுத்தி மதத்தில் நுழையவைப்பதற்கோ ஒருவரை மதத்திலிருந்து கட்டாயப்படுத்தி நீக்கி கொள்ளவதற்கோ முடியாது. இந்த உண்மையை உணராதவாகள், அதனை உணர்ந்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும் இந்த குர்-ஆன் வசனத்தின் உண்மைத்தன்மையை வரலாறு உறுதிப்படுத்துகிறது.

## THE PRACTICE OF ISLAM THROUGH FORCE

## பலத்தின் மூலமாக இஸ்லாத்தின் நடைமுறை

நேர்மை, உண்மை, தேசபக்தி சமாதானம், பிறமக்களின் உரிமைகளை பாதுகாப்பு மற்றும் பிற இஸ்லாமிய போதனைகள் ஆகியவற்றைப்பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை வளர்ப்பது போன்றவைகள் இஸ்லாமிய மற்றும் இஸ்லாமியமல்லாத அரசாங்கங்களுடைய மிக பெரிய திட்டமாக இருக்கின்றது. ஆனால் அவர்கள் எல்லாம் தவறான முறையில் அதனை புரிந்திருக்கின்றனர். உதாரணமாக, இக்காலக்கட்டத்தில் அஹமதியா ஆட்சியாளர்கள் தண்டனை, வற்புறுத்தல் மற்றும் புறக்கணிப்பு ஆகிய கட்டாயப்படுத்தல் முறைகளை பயன்படுத்தி கலீ∴பத்துல்லாஹ்வுக்கு எதிராக, இறை வெளிப்பாடுகளுக்கு எதிராக அவதூறுகளை பரப்புகின்றனர். உண்மையை தேடுபவர்களை அன்னாரிடமிருந்து விலக்கி கொள்லாம் என்ற எண்ணத்துடன் அத்தீய செயல்களில் அவர்கள் ஏற்பட்டுவருகின்றனர்.

இஸ்லாம் ஒரு இறைமதம் என்று நேர்மையான ஒவ்வொரு அஹ்மதி முஸ்லீமுக்கும் ஆழமான மற்றும் வலுவான நம்பிக்கை உண்டு. அந்நம்பிக்கை அவர்களின் இதயத்தில் நிரம்பியிருக்கின்றது. அல்லாஹ், ஒருவன் என்றும் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் மிக சிறந்த தூதர் என்றும் காத்தமுன்னபியீன் என்றும் நபித்துவத்தின் வாசல் என்றென்றும் திறந்திருக்கின்றது என்றும் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் சமுதாயத்தில் அல்லாஹ் தனது பிரதிநிதிகள், தூதர்கள், மற்றும் நபிமார்களை அனுப்பிவைத்துக் கொண்டிருப்பான் என்றும் அண்ணல் நபிகள் நயகம் (ஸல்) அவர்களின் சிறப்பிற்கு அது எந்த வகையான பாதிப்பையும் ஏற்படுத்தாது என்றும் அஹ்மதியா முஸ்லீம்கள் வலுவாக நம்பிக்கை கொள்கின்றனர். ஆனால் மிருகத்தனத்தால் அஹ்மதியா அதிகாரிகள், ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்களுக்கும், உண்மையைத் தேடும் பிற மக்களுக்கும் மிரட்டல் மற்றும் அழுத்தத்தினை கொடுத்து அவர்களை எதிர்மாறாக நம்பவைக்கும் முயற்சிகளில் ஈடுப்பட்டு வருகின்றனர். இப்போது அவர்களின் உதடுகளில் மட்டுமே நபித்துவத்தின் வாசல் திறந்திருக்கின்றது. குறிப்பாக பிற அனஹ்மதி முஸ்லீம்களிடம் வாதங்களில் ஏற்படும்போது மட்டும்தான் நபித்துவத்தின் வாசல் திறந்திருக்கின்றது என்று அவர்கள் கூறுகின்றார்கள். ஆனால் உண்மையில் செயல்முறையில் அவ்வாசலை அவர்கள் அடைத்து விட்டனர். அவர்களைப் பொறுத்தவரையில் இஸ்லாமிய மஸீஹ்மார்களும் நபிமார்களும் இனி தோன்றமாட்டார்கள் என்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) க்கு பிறகு மக்களால் தேர்ந்தெடுக்கும் கலீ.ஃ.பாக்கள் அதாவது கிலா.ஃ.பத் மட்டுமே தொடரும் என்றும் நம்பிக்கை கொள்கின்றனர். எக்காலத்திலும் அந்த கில.ஃ.பத் ஆட்சிமட்டும் நிலைத்திருக்கும் என்றும் நினைக்கின்றனர். இது அவர்களின் இரட்டை வேடம் ஆகிறது. இது அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் கற்பித்த போதனைகளுக்கு முற்றிலும் எதிரான நம்பிக்கையாகும்.

இத்தகைய ஒரு ஜமாத்தை ஹஸ்ரத் மஸீஹ் மௌஊத் (அலை) அவர்களின் ஜமா அத்து என்று எவ்வாறு உரிமைகோர முடியும்? இது தேசியம் மற்றும் சர்வதேசிய அளவிலானது என்றும் அமைதி நிறைந்த அமைப்பு என்றும் எவரிடத்திலும் எங்களுக்கு பகைமை இல்லை என்றும் எந்த

கருத்துவேறுபாடுகளும் இங்கு இல்லை என்றும் எவ்வாறு இவர்களுக்கு கூற முடியும்?

உலகளாவிய செய்தியையும் அதன் பதாகையின் கீழ் மனிதகுலத்தை ஒன்றிணைக்கும் இலட்சியத்தையும் கொண்ட எந்த ஒரு உண்மையான மார்க்கத்திற்கும் அதன் செய்தியை பரப்புவதற்கு ஒரு நிமிடம் கூட அழுத்தம் மற்றும் கட்டாயத்தினை பயன்னுடுத்த முடியாது. துன்புறுத்தல், புறக்கணித்தல், குடும்ப உறவுகளை துண்டித்தல், கடுமையான அபராதங்கள் சுமத்தல் சுருக்கமாக படைப்பினங்களை பயப்படுத்தி, ஆயிரகணக்கிற்கான மக்களை தாக்கி கீழ்படிய வைக்க முடியும். ஆனால் ஒரு இதயத்தையும் தாக்கி, கீழ்படிய வைக்க ஒருபோது முடியாது. ஏனெனில் இப்பயம் காரணமாக அவர்கள் தலை குனிந்து விடலாம். ஆனால் அவர்களின் ஆன்மீகம் ஒருபோதும் குனிந்து விடாது. அல்லாஹ் மற்றும் அவன் தேர்ந்தெடுத்த இறை பிரதிநிதியிடம் செல்லும் பாதையினை அடைப்பதற்கு அழுத்தம் மற்றும் ஆற்றலினை பயன்படுத்துவதை இஸ்லாம் தடைசெய்யப்பட்டுள்ளது.

அதனால் இத்தகைய வற்புறுத்தல் தேவையில்லை. உண்மை எங்கிருக்கின்றது என்பதை தீர்மானிப்பதற்கான உரிமை ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. அவர்கள்தான் முடிவெடுக்க வேண்டியவர்கள். அண்ணல் நபிகள் (நாயகம்) (ஸல்) அவர்களிடம் அல்லாஹ் இவ்வாறு கூறியிருந்ததாக காணலாம். **"ஆற்றலைப் பயன்படுத்தி ஒரு சமூதாயத்தை சீர்திருத்த முடியும் என நீர் நினைத்து விடாதீர்கள்".**

ஒரு புதிய சித்தாந்தத்தை பரப்புவதற்கான செயல் பாட்டின் போது திடீரென ஒரு போராட்டமோ, வன்முறையோ நிகழ்ந்தாலும் கூட இஸ்லாம், மேலும் தெளிவாக கூறினால் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் அதன் தோழர்களிடம் மோதல்கள் மற்றும் வன்முறையினை தவிர்ப்பதற்காக முடிந்தவரை பொறுமையையும் விடாமுயற்சியையும் காட்டுமாறு கேட்டுகொள்கிறது. ஏனெனில் இஸ்லாமின் ஆற்றல் என்பது அதன் தத்துவங்களிலும் வாதங்களிலும் ஆகும். வெளிப்படையான பௌதீக ஆற்றலில் அல்ல. இதுவே உண்மை.

இஸ்லாமைத் தவிர மற்றனைத்து சித்தாந்தங்களையும் வாதங்கள் மூலம் முறியடித்து விடலாம். இறைவன் தனது மதத்தை, உண்மையான நம்பிக்கையை பலப்படுத்துகின்றான். தெய்வீக உதவியால் உண்மையான இஸ்லாம் புத்துயிர் பெற்றிருக்கிறது. இறைத் திட்டத்தைத் தவிர அனைத்து திட்டங்களும் தோற்கடிக்கப்படும். இறைத் திட்டத்தின் வடிவான ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் மூலம் அது நிகழும். ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் ஒருபோதும் சரிந்து விடாது, அது முறியடிக்கப்படாது ஆனால் அது தீயசக்திகளை அழித்துவிடும். இன்ஷா அல்லாஹ் ஆமீன்.

## THE TRUTH ON JIHAD

## ஜிஹாத் பற்றிய உண்மை

ஜிஹாத் பற்றிய ஏதேனும் தவறான கருத்து இருந்தால் அதனை அகற்றிக்கொள்வதற்கான நேரம் பின்னடைந்துள்ளது. மார்க்கத்தொடர்பான காரியங்களில் எவ்விதமான கட்டாயம் மற்றும் அழுத்தம் கூடாது என்றும் இஸ்லாம் அதனை தடை செய்யப்பட்டுள்ளது என்றும் முறைப்படி அறிக்கை விடுக்க வேண்டும். மட்டுமல்ல நம்முடைய அறிவின்படி, திருக்குர் ஆன் போதனைகளில் காணலாம், சிந்திப்பதற்கான சுதந்திரம் வழங்கியிருக்கும் ஒரேயொரு மார்க்கம் இஸ்லாம் ஆகிறது. இது தொடர்பாக கோவில்கள் தேவாலயங்கள் மற்றும் பிறமதங்களைப் பின்பற்றுபவர்களின் ஜெப ஆலயங்களை மதித்து நடக்குமாறு அந்நூல் கேட்டுக் கொள்கிறது. **உலக ஆசைகளில் ஒட்டிருப்பதற்காக, உண்மையான இறைபோதனைகளை கைவிட்டு கொண்டும் முஸ்லீம்களிடையே பிளவு மற்றும் பாதுகாப்பின்மையினை உருவாக்கிக் கொண்டும், இஸ்லாமிற்கும் திரு நபி (ஸல்) அவர்களுக்கும் அவமானத்தை வரவழைத்து கொண்டும் இரகசிய திட்டங்களுடன் செயல்பட்டு வருகின்ற இஸ்லாமிய அறிஞர்கள் மற்றும் முல்லாக்கள் என்று அழைக்கபடுபவர்களின் அனைத்து விதமான செயல்பாடு மற்றும் நடவடிக்கைக்களை நாங்கள் கடுமையாக கண்டிக்கிறோம், நிராகரிக்கிறோம்.**

பெரும்பலான முஸ்லீம் பிரிவினர்கள் இப்போதும், ஒரு சீர்த்திருத்தவாளரின் வருகையினை காத்திருக்கின்றனர் அல்லது ஒரு மஹ்தியின் வருகையினை எண்ணியிருக்கின்றனர் அல்லது ஒரு மிஸிஹாவின் வருகையினை எதிர்பார்த்திருக்கின்றனர். அவர்களின் கருத்தின்படி மஸீஹ் என்பது இரத்த வெறி பிடித்த ஒரு இமாம் ஆகிய முஹம்மது ஆவார். அவர்களின் கருத்தின்படி மர்யம் (அலை) அவர்களின் புதல்வனாகிய ஈசா (அலை) தான் மேலும் வர வேண்டும். இவர்கள் இருவரும் பூமியிலெங்கும் சுற்றிநடந்து, எவர் ஒருவர் முஸ்லீமாக மாறிவிட மறுத்துக் கொள்கின்றாரோ அவரை அவர்கள் கொலை செய்து விடுவார்கள். இந்த முஸ்லீம் பிரிவினர்களிடமிருக்கும் ஜிஹாத் என்னும் கருத்து இதுவாகும். ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் போர்களுக்கு முடிவு கட்டுவார் என தீர்க்கதரிசனங்களில் காணலாம். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி என்பது ஒரு நபரின் இருபதவி பெயர்கள் ஆகும். அது காலகட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப புனித குர் -ஆனின் மறு விளக்கமாகிறது. ஜிஹாத் என்ற கருத்திற்கு, இறையியலாளர்கள் என அழைக்கப்படும் மௌலவிகள், மற்றொரு வகையில் கூறினால் இந்த முல்லாக்கள் அளித்த விளக்கம் மற்றும் பிரச்சாரம் முற்றிலும் தவறாகும். அவர்களின் அவ்விளக்கம் மற்றும் பிரச்சாரம் உலக மக்களை மூர்க்கமான மிருகங்களாக மாற்றிவிடவும் எல்லா நல்ல மனிதபிமான குணங்களையும் அவர்களிடமிருந்து பறித்து விடவும் செய்யும் என்பதைத் தவிர வேறு எதையும் வழங்குவதில்லை.

உண்மையில் உலகில் இதுவே நடந்தது. இஸ்லாம் அதன் ஆரம்பகட்டத்தில் போராட வேண்டிய காரணம் கூட இந்த மௌலவிகளுக்கு தெரியாது. அறியாமையால் பிரச்சாரம் செய்து வருகின்ற இந்த அபாயமான கருத்துகள் அநேக மக்களின் வாழ்க்கையினை அழித்து வருகின்றது. இந்த மௌலவிகள் அரசாங்கத்தின் அதிகாரிகளுக்கு முன்னால் குனிந்து சிரம்பணிந்து விடுகின்றனர். ஆனால் அவர்கள், தங்களுக்குள் தனியாக இருக்கும் போது நம்நாடு ஒரு போரின் வாசலை எட்டியுள்ளது என்றும் நம்பிக்கையினை பாதுகாப்பதற்கும் பரப்புவதற்கும் நாம் வாள் எடுத்து போர் செய்ய வேண்டும் என்றும் அது நம் கட்டாய கடமையாகிறது என்றும் கூறுகின்றனர். ஆனால் சிறுபான்மையான மக்கள் இக்கருத்தை ஆதரிப்பதில்லை. பெருபான்மையான மக்களும் திருக்குர் -ஆனுக்கும் திரு நபி (ஸல்) அவர்களின் போதனைகளுக்கும்

எதிரான அக்கருத்தை ஆதரிப்பவர்களாக இருக்கின்றனர். இதற்கு எதிரான கருத்துகள் மற்றும் ஆலோசனையினை தெரிவிக்கும் மக்களை அவர்கள் தஜ்ஜால் என்று முத்திரை குத்தி அவமானிக்கின்றனர். அவர்களை கொன்று விட வேண்டும் என்று அச்சமின்றி அறிக்கை விடுக்கின்றனர்.

இத்தகைய நம்பிக்கை தொடர்பான காரியங்களைப் பற்றி நான் ஏற்கனவே பேசியருக்கிறேன். அவர்கள் கருத்தில் கொள்ளும் ஜிஹாத்தின் இந்த கோட்பாடு முற்றிலும் தவறானது என்பதை அவர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

ஜிஹாத்தின் கோட்பாடுகளைப் பற்றி அவர்கள் புரிந்திருப்பது முற்றிலும் தவறு என்று நான் கூறுவதன் முதல் காரணம் என்பது, இது மனிதனில் குடிகொள்ளும் அனுதாபம் என்ற பண்பினை அடக்குகிறது. இஸ்லாத்தின் ஆரம்ப நாட்களில் ஜிஹாத் அனுமதிக்கப்பட்டதைக் குறித்து ஆரம்பகால முஸ்லீம்கள் புரிந்துக் கொண்டதிலிருந்து முற்றிலும் மாறான நிலையில் இப்பொழுது இவர்கள் புரிந்திருக்கின்றனர். அவர்களுக்க எங்களிடம் இரண்டு பதில்கள் உள்ளன.

1. தூதர் (ஸல்) அவர்கள் ஒருபோதும் வாளை எடுக்கவில்லை. பகைவர்கள் முதன்முதலில் வாளைப் பயன்படுத்தி எவ்வித இரக்கமும்மின்றி அப்பாவிகள், நேர்மையான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை படுகொலை செய்தார்கள். அதற்கு எதிராக ஒரு தற்பாதுகாப்பிற்காக மட்டுமே அவர் வாளை எடுத்து போர் செய்தார். இன்று தேசியம் மற்றும் சர்வதேசிய அளவில் இந்த சட்டம் அமலில் உள்ளது. அதனை தற்காப்பு போரர் என கூறப்படுகிறது. இதுவே திருநபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட ஜிஹாத். அப்பாவியான மக்களை, பகைவர்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்தனர். அதை எண்ணி நாம் இன்றும் கூட கண்ணீரைப் பொழிந்தவாறு இருக்கின்றோம்.

2. ஒரு நிமிடம் நமக்கு சற்று யோசிப்போம்! இஸ்லாமின் ஆரம்பக்கட்டத்தில் அத்தகைய ஜிஹாத் கட்டாயம் மற்றும் கடமையாக இருந்தது. மௌலவிகள் இன்று இதனை தவறாக புரிந்துள்ளனர். இன்று நம் காலகட்டத்தில் இதற்கு எந்த விதமான நியாயமும் இல்லை. நிச்சயமாக ஒரு காரியம் எழுதப்பட்டுள்ளது. அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தேன்றும்

**போது அவர் வாளை பயன்படுத்தி செய்யும் ஜிஹாத் மற்றும் மதசம்பந்தமான போர்கள் ஆகியவற்றிற்கு முடிவு கட்டுவார். ஏனெனில் அன்னார் வாளை பயன்படுத்தமாட்டார். தற்காலிகமான எந்த ஓர் ஆயுதங்களையும் அவர் பயன்படுத்தமாட்டார். அன்னாரின் வாள் என்பது அவரது ஆழமான உறுதிப்பாடுகள் ஆகும். அன்னார் அமைதிக்கான அஸ்திவாரத்தை போடுவார். சிங்கங்களையும் ஆடுகளையும் அன்னார் ஒன்று சேர்பார். அன்னாரின் காலம் என்பது அமைதியுடையவும் இரக்கதிதினுடையவும் மனிதானுதாபத்தினுடையவும் காலமாக இருக்கும். அப்படியிருக்க, ஏன் இந்த மக்கள் சிந்திப்பதில்லை? பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார். அதாவது "வாக்களிக்கபட்ட மஸீஹ் (அலை) அவர்கள் போர்களுக்கு முடிவு கட்டுவார்" ஏன் இதைக் குறித்து இந்த மக்கள் சிந்திக்காமலிருக்கின்றார்கள்!**

முஸ்லீம் இறையியலாளர்களே, மௌலவிகளே, நான் சொல்வதைக் கேளுங்கள். நம்பிக்கையின் பெயரில் நாம் ஒன்றுக்கொன்று போராடவேண்டிய நேரமல்ல இது. அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கீழ்படியுங்கள். இஸ்லாத்தின் உடலை பிரித்துக் கொள்ளதீர்கள். இஸ்லாமிய நம்பிக்கை நம்மிடம் தேவைப்படுவது ஒற்றுமையும், ஏக இறைவனின் மீதான வலுவான நம்பிக்கையும் ஆகும். இஸ்லாம் என்றால் அது ஒரு இராஜியமல்ல. அது ஒரு நபருமல்ல. இஸ்லாம் என்றால், அது சௌதி அரேபியாவோ, பக்கிஸ்தானோ அல்லது இந்தியாவோ அல்ல. மாறாக இலட்சகணக்கான மக்களாகிய நீங்களும், நானும், நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு உடல் மற்றும் ஒரு ஆன்மாவாக மாறி, திருப்தியுடனும் மகிழ்ச்சியுடனும் அல்லாஹ்வின் அன்பினை தேடிக்கொள்வதே இஸ்லாம்.

நிச்சயமாக, வாளினை பயன்படுத்தி செய்யும் ஜிஹாத் மற்றும் அனைத்து தரப்பட்ட மத போர்களுக்கும் நாம் முடிவு கட்டவேண்டும். தற்பாதுகாப்பு என்பது எப்போதும் நிலை நிற்கும் ஒன்றாகும். அதாவது வரம்பை மீறிக் கொள்ளும் போது இஸ்லாத்தின் எதிரியின் கையால் உங்கள் மரணம் நெருங்கும் போது, தன்னை ஒரு முஸ்லீம் என்று அழைக்கும் உங்களின் சகோதரனுடைய கரங்கள் கொண்டானாலும் சரி, அவர் சட்டத்திற்கு கட்டுபடாதவராக, உங்களின் நம்பிக்கையின் பெயரில் உங்களை தாக்கிகொள்ள அவர் தயாராகும் போது

அந்நிலையில் உங்களுக்கு பதிலளிக்க அனுமதி உண்டு. அதாவது அச்சூழ்நிலையில் அனைத்தையும் இல்லாஹ்விடம் ஒப்படைத்துக் கொண்டு, நீங்கள் பதிலடி கொடுங்கள். அல்லாஹ்வின் பாதையிலுள்ள போர், போராட்டம் என்பது ஒருவகையிலும் இன்று சில தீவிரவாதிகள் செய்வது போல் தற்கொலை குண்டுவெடிப்பு அல்ல. அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைக்கும் திரு நபி (ஸல்) அவர்களின் போதனைகளுக்கும் எதிராக செயல்படுகின்றனர். தற்கொலையினை இஸ்லாம் கண்டிக்கிறது. இத்தகைய மக்களுக்கு சொர்க்கத்தின் தோட்டம் காத்திருப்பதில்லை. மாறாக அவர்களுக்காக காத்திருப்பது நரகம் ஆகும். இதனை மிக நல்ல முறையில் புரிவதற்கு முஸ்லீம் சமுதாயத்திற்கு யாவும் அல்லாஹ் உதவி புரியட்டும்!. அவர்கள் அனுமதிக்கப்பட்ட வரம்புக்குள் நின்று செயல்படுகின்றவர்களாக மாறி விடட்டும். ஆமீன்.

இந்த விஷயம் மிக விரிவான ஒன்றாகும். இவ்விஷயத்தின் பால் நான் மேலும் திரும்ப வருவேன். இன்ஷா அல்லாஹ். இஸ்லாமை வலுப்படுத்துவதற்காக நாம் அனைவரும் ஒருங்கிணைந்துக் கொள்ள தேவையான தைரியம் மற்றும் புத்தியினை அல்லாஹ் நமக்கு அளிப்பானாக! அது வழியாக அல்லாஹ்வின் கட்டளைகளை, உண்மையான போதனைகளை நமக்கு உலகத்திற்கு வழங்கிவிடலாம். இன்ஷா அல்லாஹ். ஆமீன்.

**Translated by:**

*Naib Amir - Azim Ahmad*
*7339689239*

## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**